குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண். 88/2019

அ.சா. 2

2024–ம் ஆண்டு மே 16–ம் தேதி வியாழக்கிழமை அரசு தரப்பு சாட்சி – 02 வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.ஆனந்தன் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கண்ணன் | ஜாதி | |
| தந்தை பெயர் | மாரியப்பன் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 05.14 மணி,

Accused Suriyamoorthy present. Advocate Mr. Ezhilarasu present for Accused. APP Mr.P.Suresh present.

**முதல் விசாரணை:**

1. நான் எலத்தூரில் குடியிருந்து கொண்டு ஆட்டோ ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். கடந்த 2018 ம் ஆண்டு மாலை 04.00 மணியளவில் தீவட்டிபட்டியில் உள்ள டேனிஸ்பேட்டை சாலையில் ஆட்டோ ஸ்டேன்டில் இருந்தேன். அப்போது சேலம் டூ தர்மபுரி செல்லும் சாலையில் எதிர் பக்கத்தில் உள்ள ஐயங்கார் பேக்கரி அருகே டாமல் என்று சத்தம் கேட்டது. அருகில் சென்று பார்த்த போது மின்சார வாரியத்தில் பணிபுரியும் நடேசன் என்பர் அடிபட்டு கிடந்தார்.

2. அவருக்கு பின்பக்க தலை மற்றும் மார்பு, கால்பகுதியில் காயம் ஏற்பட்டு கிடந்தார். எப்படி அவருக்கு காயம் ஏற்பட்டது என்று நான் பார்க்கவில்லை. சத்தம் கேட்டு தான் நான் பார்த்தேன். அதன்பின்பு அங்கு இருந்தவர்கள் 909 டாடா வாகனம் வந்து டிவிஎஸ் 50 இருசக்கர வாகனத்தில் வந்த நடேசன் மீது மோதி விட்டதாக சொன்னார்கள். அவரை ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். மருத்துவமனை செல்லும் வழியில் இறந்துவிட்டதாக அவர் மகன் சொன்னார்.

S SHARMILA
Digitally signed by S SHARMILA
Date: 2024.05.16 18:00:24 +0600

3. நடேசன் சென்ற இருசக்கர வாகனத்தின் பதிவெண் மற்றும் விபத்து ஏற்படுத்திய 909 டாடா வண்டியில் பதிவெண் மற்றும் அதன் ஓட்டுநர் யார் என்ற விபரம் தெரியாது. போலீசார் சம்பவம் நடந்த மறுநாள் என்னை விசாரித்தார்கள்.

**( அரசு தரப்பு சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்க கேட்டதின் பேரில் அனுமதி வழுங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)**

4. போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும், அந்த விசாரணையில் கடந்த 13.09.2018 ம் தேதி 16.10 மணியளவில் சேலம் டூ தர்மபுரி சாலையில் தீவட்டிபட்டி பஸ்டாப் அருகே மேற்படி நெடுஞ்சாலையின் இடது புறம் உள்ள சர்வீஸ் சாலையில் நடேசன் என்பவர் TN 29 9255 என்ற பதிவெண் உடைய டிவிஎஸ் 50 இருசக்கர வாகனத்தில் மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி வந்த போது அதே சர்வீஸ் சாலையில் வடக்கில் இருந்து தெற்கு நோக்கி ஆஜர் எதிரி TN 30 AW 8688 என்ற பதிவெண் உடைய டாடா 909 லாரியை அதிவேகமாகவும் அஜாக்கராதையாகவும் ஹாரன் அடிக்காமல் ஓட்டி வந்து நடேசன் சென்ற இருசக்கர வாகனத்தின் மீது விபத்து ஏற்படுத்தியதை நான் நேரில் பார்த்ததாக கூறிவிட்டு தற்போது பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.**

இல்லை

**மறு விசாரணை : இல்லை**

விசாரணை முடிந்த நேரம்: 05.24 மணி,

S SHARMILA

Digitally signed by S SHARMILA
Date: 2024.05.16 18:00:29 +0600